ஓம் சரவணஜோதியே நமோ நம

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1477

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.10.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. அறமாக வாழுகின்ற அரங்கனே
ஆற்றலாக உலகோர்க்கு ஞானம் தனை
வரமாகத் தந்து நாளும்நாளும்
வையகத்தைக் காக்கும் மகா சேவை

2. சேவை ஆற்றுகின்ற ஞான தேசிகனே
செப்பிடுவேன் உந்தனுக்கு ஆறுமுகன் யானும்
அவனியிலே ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 28 ம் நாள், 15.10.2023, ஞாயிற்றுக்கிழமை)
அரங்கன் பலம் இன்னும் கூட எடுத்துரைப்பேன்

3. வகைபட ஞானத்திறவு கொண்டு
வள்ளலாக வையகத்தில் மாதர்மத்தை
தானதர்ம பலம் கூடும் படி
தரணி எங்கும் கிளைகளை உருவாக்கி

4. உருவாக்கி அற்புதம் நடத்துகின்ற
ஓங்காரனே  உன் தர்மம் உலகை காக்கும்
ஓங்காரனே உன் சன்மார்க்கம்
இந்த உலகையே மீட்கும்

5. மீட்புகொண்டு அரங்கன் நீயே
மேலான தொண்டர்படை கூட்டி
ஆட்சி புரிவாய் ஞானவழியாக
அகிலத்தையே ஞானலோகமாக மாற்றுவாய்

6. அன்னதனால் அரங்கன் குடில் நாடி உலகோர் அனைவரும் வந்து இனிதே வரமெனும் அரங்கன் தீட்சைபெற்று வணங்கிவர வையகத்தில் யாவர்க்கும் ஞான சித்தி

ஞானசித்தி அரங்கனால் நடக்கும்
ஞான ஆட்சி அரங்கன் தொண்டர்களால் உருவாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–